# இந்திய சுதேச மிசனெறிச் சங்கம்

## National Missionary Society of India

## பொதுச் செயலர் கடிதம்

ஆகஸ்ட் – 2020

தகவுகள்

சுயா அறிவிப்பு ஆதரவு ஆட்சி



NMSI செம்பொருள் 2020–2022
மண்ணின மக்களின் மாற்றுருவாக்கத்துக்கான உடன் பயணம்

**ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார் வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார் உன் எலும்புகளை வலிமையாக்குவார் நீயும் நீர் பாய்ந்த தோட்டம்போலும், ஒருபோதும் வற்றாத நீரூற்றைப்போலும் இருப்பாய்.**

– ஏசாயா 58:11

கிறிஸ்துவுக்குள் அன்புக்குரிய சகோதர, சகோதரிகளே, இறைமகன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பார்ந்த வாழ்த்துக்களையும், நற்செய்திப் பணிக்கு நீங்கள் வழங்குகின்ற ஆதரவுக்காக கடவுளுக்கு நன்றியையும் கூறுகின்றேன்.

2020-ஆம் ஆண்டுக்குரிய விடுதலைத் திருநாளை கொண்டாடும் சூழலில் உங்களுக்கு இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தின் சார்பில் விடுதலைத் திருநாள் நல் வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கிறேன்.

கொரோனா தீநுண்மியின் (Covid 19) தாக்கம் அதிகரித்துக் கொண்டிருப்பதாலும், அரசு அறிவித்துள்ள ஊரடங்கு தொடருவதாலும் நமது அன்றாடக வாழ்வில் பல கடினங்களை சந்தித்து வருகிறோம். இக்கொடூரமான காலகட்டத்தில் நமது உடல் ஆரோக்கியம், ஆன்மீக வாழ்வு ஆகியவை சிறப்பாக அமைவதற்கு அதிக கருத்துடன் செயல்பட வேண்டும்.

நம்மால் இயன்றமட்டும் அரசின் விதிமுறைகளைப் பின்பற்றி துன்புறும் மக்களுக்கு உதவி செய்வதற்கும் கொரோனா தீநுண்மியைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் முயல வேண்டும். கொரோனா தீநுண்மியின் அதிவேகத் தொற்று மற்றும் அதனால் ஏற்படும் சிரமங்களை குறைப்பதற்கு அரசுடன் இணைந்து பங்காற்ற வேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

**1. மிசனெறிப் பணி:-**

இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தில் பணியாற்றும் மிசனெறிகள் குடும்பமாக பணித்தளங்களில் தங்கி பணித்தள மக்களுக்கு நல்ல வழிகாட்டல்களையும், தேவையான உதவிகளையும் செய்து வருகிறார்கள். தற்போது நடைமுறையிலிருக்கும் அரசின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வழக்கமாக நடைபெறும் தொழுகைகள், சுவிசேஷப் பணிகள் முழுமையாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் நமது மிசனெறிகள் தங்களது பணித்தள விசுவாசிகள், விசுவாச வாழ்விலிருந்து விலகிச் செல்லாதபடி நேரடியாகவும், தொலைபேசி வழியாகவும், இணையதள பயன்பாட்டின் வழியாகவும் இறைவேண்டலுடன் ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். கொரோனா தீநுண்மியின் பொருளாதார தாக்கத்தினால் நமது மிசனெறிகள் பல வகையான பொருளாதாரக் கடினங்களை சந்திப்பதும், அன்றாடக தேவைகள் சந்திக்கப்பட முடியாமல் இருப்பதும் நம்மால் உணர முடிகின்றது. அருட்பணி ஆதரவாளர்களாகிய நாம் பல கடினங்களை சந்தித்தாலும் அடிப்படை வசதி இல்லாத இடங்களில் இடம்விட்டு இடம் சென்று நமது சார்பில் சுவிசேஷப் பணி செய்யும் நமது அருட்பணி சகோதர, சகோதரிகளுக்கு மக்கதோனியத் திருச்சபையைப் போன்று உதவி செய்ய வேண்டியது நமது கடமையாகும். நமது மிசனெறி ஆதரவாளர்கள் கருணை உள்ளத்தோடு மிசனெறிகளுக்கான ஊக்கத் தொகையையும், சிறப்பு காணிக்கைகளையும் கூடுதலாக வழங்கி ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**2. மிசனெறி குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை:- (M-Kid Support).**

இந்திய சுதேச மிசனெறிச் சங்கம் காலாகாலமாக மிசனெறிகளின் குழந்தைகளுடைய கல்வியில் அதிக அக்கரைக் கொண்டுள்ளது. நமது மிசனெறிகளின் குழந்தைகள் நன்றாக படிக்க வேண்டும், தரமான கல்வி கிடைக்க வேண்டும், வாழ்க்கை உயர வேண்டும் என்பவை நமது விருப்பமும் இறை வேண்டலுமாகும். இந்நாட்களில் நமது மிசனெறிகள் தங்கள் குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். கொரோனா தீநுண்மியின் தாக்கத்தினால் பொருளாதார நிலையில் பல கடினங்களை சந்திக்கும் நமது மிசனெறிகளுக்கு குழந்தைகளின் கல்விச் செலவு கூடுதல் சுமையாக உள்ளது. ஆண்டவரின் நற்செய்திக்காக தங்களை முழுமையாக ஒப்படைத்து தியாகத்தோடு சுவிசேஷப் பணி செய்யும் நமது மிசனெறிகளின் குழந்தைகளுக்கு தரமான கல்வி கிடைப்பதற்கும் அதற்கான செலவினங்களை சந்திப்பதற்கும் மனப்பூர்வமான காணிக்கைகளால் M.Kid திட்டத்தை ஆதரிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

### 3. பழங்குடியின மாணவர் விடுதி மற்றும் பள்ளிக் கூட அருட்பணி :-

நமது விடுதி மாணவ, மாணவியர்களும், பள்ளிக்கூட மாணவ, மாணவியர்களும் அரசு பொதுத் தேர்வில் சிறந்த வெற்றிகளை பெற்றிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. கல்வி கிடைக்கப் பெறாத சூழலில் வாழும் மாணவ, மாணவிகளுக்கு நல்ல கல்வி கிடைப்பதற்கு தேவையான உதவிகளைத் தொடர்ந்து செய்யும்படி உங்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். பழங்குடியின மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டுக்காக நிதி உதவி செய்வோருக்கு 80G வரிச் சலுகை சான்றுகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. கிறிஸ்துகுல ஆசிரமத் திருப்பணி:-

இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தின் கிறிஸ்துகுல ஆசிரமங்கள் ஆண்டவரின் கிருபையினால் புதுப் பொலிவுடன் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமத்திலுள்ள மருத்துவமனை கடைநிலையில் வாழும் மக்களுக்கு நலம் தரும் திருப்பணியை செய்வது மகிழ்ச்சியாக உள்ளது. திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமத்தில் அமைந்துள்ள கண் மற்றும் பொது மருத்துவமனைக்கு மருந்துப் பொருட்களும், மருத்துவ உபகரணங்களும் வழங்குவதற்கு முன் வருவோர் எங்களை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

### 5. பணித்தளங்களில் கொரோனா பாதிப்பு:-

நாடு முழுவதும் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் கொரோனா தீநுண்மி நமது பணித்தளங்களையும், பணித்தளத்தை சுற்றியுள்ள இடங்களையும் வெகுவாக பாதித்துள்ளது. வட இந்தியாவிலும், வட கிழக்கு இந்தியாவிலும் பல்வேறு பணித்தளங்களில் மக்கள் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நமது மிசனெறிகளும், பணித்தள விசுவாசிகளும் இந்த கொடிய நோயிலிருந்து தப்புவிக்கப்பட இறைவனிடம் மன்றாடுவோம்.

### 6. சென்னை மாநகர வருடாந்திர விற்பனை விழா:-

இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தின் சென்னை மாநகர வட்டாரக் குழுக்கள் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி சென்னையில் வருடாந்தர விற்பனை விழாவை நடத்தி நற்செய்தி பணிக்காக நிதி திரட்டி சுவிசேஷப் பணியை ஆதரித்து வருகிறது. இவ்வாண்டு கொரோனா தீநுண்மியின் தாக்கத்தினால் வருடாந்திர விற்பனை விழாவிற்கான ஆயத்தப் பணிகளை முழுமையாக தொடங்க முடியவில்லை. இச்சூழலில் இந்திய மிசனெறிச் சங்கத்தின் மிசனெறிப் பணி தடையின்றி நடக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்தோடு வருடாந்திர விற்பனை விழாவை 14.11.2020 சனிக்கிழமை வெப்பேரி CSI தூய மத்தியாஸ் ஆலயத்தில் இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தின் தலைவரும், சென்னைப் பேராயருமான Rt.Rev.Dr.J.ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் தலைமையில் நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

சென்னை மாநகரத்திலுள்ள வட்டாரக் குழுக்களும், அருட்பணி ஆதரவாளர்களும் நல்லுள்ளம் படைத்த நண்பர்களும், சங்கத் தலைவர்களும் மனப்பூர்வமான காணிக்கைகளை வழங்கி விற்பனை விழாவை சிறப்பிக்கவும் ஆயத்த பணிகளுக்காக இறை வேண்டல் செய்யவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். கொரோனா தீநுண்மியின் தாக்கம் நவம்பர் மாதத்திற்குள் குறையாவிட்டால் இணையதள சேவைகளைப் பயன்படுத்தி நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**7. சுந்தரவனக் காடுகள்:– (Sunderbens Islands)**

இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தின் பணித்தளத்தில் மிக முக்கியமான பணித்தளமான மேற்கு வங்காளத்திலுள்ள சுந்தரவனக் காட்டு பகுதிகளில் மேய் மாதம் உருவான ஆம்பன் புயலினால் நமது மிசனெறிகள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். நம்முடைய சுவிசேஷப் பணியினால் இரட்சிப்பின் அனுபவத்தில் கடந்து சென்ற இளம் விசுவாசிகள் பலர் பல பாதிப்புகளைக் கண்டுள்ளனர். வீடுகளை இழந்த நமது மிசனெறிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இப்பகுதி மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பவும், அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் நிவாரண உதவிகள் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியுடன் வாழவும் ஆண்டவரிடத்தில் மன்றாடுவோம்.

**8. கோழிக்கோடு – பெட்டிமுடி டிவிசன் (கேரளா) விமான விபத்து:–**

துபாய் நாட்டிலிருந்து கேரளாவுக்கு வந்த விமானம் 07.08.2020 அன்று விபத்துக்குள்ளாகி சுமார் 20 பேர் பலியாகியுள்ளனர். பெரும்பாலான மக்கள் காயங்களுடன் சிகிச்சைப் பெறுகின்றனர். இந்த சோகமான விபத்தினால் மரணமடைந்த விமானிகள் மற்றும் பயணிகளின் ஆன்ம இளைப்பாறுதலுக்காகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும், ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**9. இராஜமலை (கேரளா) நிலச்சரிவு :–**

கேரளாவில் இடுக்கி மாவட்டத்திலுள்ள மூணாறுக்கு அருகிலுள்ள இராஜமலை என்னுமிடத்தில் கனமழையின் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவினால் ஏராளமான குடும்பங்கள் உயிரை இழந்தும், உறவுகளை இழந்தும், உடமைகளை இழந்தும் நெருக்கடியான நிலையில் உள்ளனர். சுமார் 55 பேர் மண்ணுக்குள்ளேயே மடிந்துவிட்டனர் என்பது நெஞ்சை உடைக்கும் செய்தியாகும். இக்கிராமத்தில் வாழ்கின்ற பெரும்பாலான மக்கள் தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றுகின்ற தமிழ் மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வுக்காகவும், உயிர் நீத்தோரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காகவும் இறைவனிடத்தில் மன்றாடுவோம்.

**10. நம்பிக்கையில் உறுதியாயிருப்போம்:–**

நம்முடைய திருச்சபைகளில் தொழுகைகள் நடைபெறாத நிலையில் மக்கள் ஒருமித்து வருவது இயலாத ஒன்றாக உள்ளது. இக்கால கட்டத்தில் இறைமக்களாகிய நாம் நம்பிக்கையில் தளர்ந்து விடாதபடி இறைவார்த்தைகளை தியானிப்பதிலும், இறை சமூகத்தில் காத்திருந்து ஜெபிப்பதிலும் அதிக நேரத்தை செலவிட வேண்டும். கடவுள் நமக்கு தந்த

சுவிசேஷப் பணிக்கான உக்கிராணத்துவத்தை மறந்து விடாமல் மிசனெறிகளை ஆதரிப்பதிலும், மிசனெறிகளுக்காக ஜெபிப்பதிலும், பணித்தள செய்திகளை பிறருடன் பகிர்வதிலும் முனைப்புடன் செயல்படுவோம். கொரோனா தீநுண்மியினால் ஏற்படும் தனிமை, மனஅழுத்தம், உறவுகளுக்கிடையிலான இடைவெளிகள், பொருளாதார பாதிப்புகள் நமது வாழ்வை சிதைத்து விடாதபடி கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு சிறப்பான வாழ்க்கை வாழ்வோம்.

### 11. கொரோனா தீநுண்மி விழிப்புணர்வு:-

கொரோனா தீநுண்மியின் தொற்று வேகமாக இருப்பதாலும், மறைமுக பாதிப்புகள் அதிகரிப்பதாலும் நாம் நமது அன்றாடக வாழ்வைக் குறித்தும், நம்முடைய சுற்று சூழலைக் குறித்தும் மிக கவனமாக இருக்க வேண்டும். சுகாதாரம், சமூக இடைவெளியைப் பின்பற்றுதல், முகக்கவசம் அணிதல், நமது வாழ்விடங்களையும், பொது இடங்களையும் தூய்மையாக பாதுகாத்தல் போன்றவை காலத்தின் கட்டாயமாகும். கொரோனா தீநுண்மி நம்மில் தொற்றிவிடக் கூடாது என்பது மட்டுமல்லாமல் நம்மால் இன்னொருவருக்கு நோய் தொற்று வந்துவிடக் கூடாது என்பதிலும் கருத்தாக இருக்க வேண்டும்.

அரசு நமக்கு வழங்குகின்ற விதிமுறைகளையும், கடவுள் நமக்கு தந்த ஞானத்தையும் பயன்படுத்தி, இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு நம்மால் இயன்ற பங்களிப்பை வழங்குவோம். நாம் வாழும் இடங்களில் பலா் கொரோனா தீநுண்மியின் அபாயத்தைப் புரிந்து கொள்ளாமல் கவனக் குறைவாக இருப்பதும், முகக்கவசங்கள் அணியாமல் வெளியே செல்லுவதும் கவலைக்குரியதாகும். கொரோனா தீநுண்மி குறித்த விழிப்புணா்வை நமது கிராமங்களிலும், திருச்சபைகளிலும், வட்டாரங்களிலும் ஏற்படுத்துவது நமது கடமையாகும்.

### 12. கனிவான வேண்டுகோள்:-

இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தில் பணியாற்றும் மிசனெறிகளுக்கு தேவையான உதவிகளை செய்து அவா்களுடைய வாழ்வு உயா் நிலையை அடைய நாம் எப்போதும் உதவியாக இருக்க வேண்டும். கொரோனா தீநுண்மியின் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையினால் மிசனெறிகளின் தேவைகளை முழுமையாக இந்நாட்களில் நம்மால் சந்திக்க முடியவில்லை. மிசனெறிப் பணியில் ஒப்படைப்புடனும், தாராள உள்ளத்துடனும் செயல்படும் நமது ஆதரவாளா்கள் மிசனெறிப் பணியின் தேவையையும், மிசனெறிகளுடைய வாழ்க்கையின் மகிழ்ச்சியையும் மனதில் கொண்டு வழக்கமான உதவிகளுடன் சிறப்பு மிசனெறி ஆதரவு உதவிகளை வழங்கி மிசனெறிப் பணியை ஊக்குவிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய மனப்பூர்வமான காணிக்கைகள் கடினமான சூழலில் நற்செய்தி பணியாற்றும் மிசனெறிகளுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியாகவும் உந்துதலாகவும் அமையும்.

### 13. NCCI தேசிய இறைவேண்டல் நாள்:- 16.08.2020

இந்திய தேசிய திருச்சபை மன்றம் (NCCI) ஆகஸ்ட் மாதம் 16-ஆம் நாள் (ஞாயிறு) தேசிய இறைவேண்டல் நாளாக கடைபிடிக்க அழைப்பு விடுத்துள்ளது. இந்திய தேசிய திருச்சபை மன்றத்தோடு இணைந்து, நாடு முழுவதிலுமுள்ள நமது அருட்பணி இயக்கத்தின் தலைவர்கள், வட்டாரக் குழுக்கள், மிசனெறிகள், முன்னேற்றப் பணியாளர்கள், பங்காளர்கள், பணித்தள விசுவாசிகள், விடுதிகள், பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள் இந்த இறைவேண்டல் நாளை பொருளுள்ள முறையில் கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தேசிய அளவிலான இந்த இறைவேண்டலை நமது சங்கம் சங்கிலி ஜெபமாக (Chin of prayer) ஞாயிறு காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஒழுங்கு செய்கிறது. இந்த இறைவேண்டல் நிகழ்வை NMS தலைமை அலுவலகத்தின் முன்னேற்றப் பணித் துறை ஒருங்கிணைக்கிறது.

NMS முன்னேற்றப் பணித் துறையின் ஒருங்கிணைப்பில் ஆகஸ்ட் மாதம் 16-ஆம் நாளை தேசிய இறைவேண்டல் நாளாக கடைபிடிப்போம். கொரோனா தீநுண்மியின் பாதிப்பினாலும், ஊரடங்கு விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதாலும் வீடுகள் தோறும் இறைவேண்டல் நிகழ்வை ஒழுங்கு செய்யவும் இணையதள சேவையை பயன்படுத்தி உங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் இறைவேண்டலில் இணைத்துக் கொள்ளவும் அன்புடன் அழைக்கிறேன்.

**நிறைவுரை:–**

தற்போதைய நெருக்கடியான சூழலில் திருச்சபைகள், நிறுவனங்கள் பல பாதிப்புகளை சந்தித்து வருகின்றன. இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தின் தலைமை அலுவலகமும் முழுப் பணியாளர்களுடன் செயல்பட முடியாத நிலையிலுள்ளது. இப்படிப்பட்ட கடினமான சூழலில் சங்கத்தின் பணிகள் சிறப்பாக நடைபெறவும், மிசனெறிகள் மற்றும் பணியாளர்கள் மகிழ்வோடு வாழவும், பணித்தள மக்களின் தேவைகள் சந்திக்கப்படவும், பழங்குடியின விடுதி மற்றும் பள்ளிக் கூட பணிகள் சிறப்பாக செயல்படவும், தனி நபர்களாக, குடும்பங்களாக, இறைவேண்டல் குழுக்களாக இறை வேண்டல் செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய இறை வேண்டல் இந்திய சுதேச மிசனெறிச் சங்கத்தின் நற்செய்திப் பணிக்கு மிகப் பெரிய உந்துதலாக அமையும்.

உலகளாவிய பாதிப்பை ஏற்படுத்தும் கொரோனா தீநுண்மிச் சூழலில், ஆரோக்கியமும், அமைதியும் நிறைந்த மகிழ்ச்சியான வாழ்க்கை நமக்கு கிடைக்க அனைத்து ஆற்றலும் நிறைந்த இறைவன் அருள் புரிவாராக!

இறை வேண்டலுடனும், நல் வாழ்த்துக்களுடனும்,

கிறிஸ்துவின் பணியில்,
**அருட்திரு.S.கிறிஸ்டோபர் விஜயன்,**
பொதுச் செயலர், NMSI.

**Online Payment Details**

**Name : The National Missionary Society of India**
**A/c No. : 408188069,**
**Bank & Branch : Indian Bank & Clock Tower, Royapettah**
**IFSC: IDIB000C038**

**Cheque / DD may be Drawn in favour of The National Missionary Society of India**

## COVID - 19 NMSI Emergency Relief Work (Feed My Sheep)



NMSI பணித்தளம் டார்ஜிலிங்கில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது



திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமத்தில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது



NMSI கொங்குறாம்பட்டு பணித்தளத்தில் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது.



NMSI மடவாளம் பணித்தளத்தில் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது.

## இந்திய சுதேச மிசனெறிச் சங்கம் (NMSI)

NMS இல்லம், 126, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014
தொலைபேசி : 044 - 28418614, 28583804, Email: nmsofindia@gmail.com
Website: www.nmsofindia.org WhatsApp: +91 94440 51314
Facebook: National Missionary Society of India - NMSI (Page)
Youtube: National Missionary Society of India - NMSI